1st March 1968]

Prices of chillies, ground-nuts, etc.

*140. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the reason for the sudden fall in the prices of chillies, groundnuts and pulses in Tamil Nad ;

(*b*) whether the Government are aware of the fact that the agriculturists are affected thereby ; and

(*c*) whether the Government will take steps to help the agriculturists ?

மிளகாய், மணிலா, பயறு ஆகியவற்றின் விலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில், மிளகாய், மணிலா, பயறு ஆகியவற்றின் விலை அண்மையில் திடீரென குறைந்த காரணம் என்ன ?

(இ) இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) விவசாயிகளுக்கு உதவும் வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:—(அ) வேர்க்கடலையைப் பொருத்த வரையில், 1965 முதல் படிப்படியாக விலை ஏறத்தொடங்கியது; 1967 ஜனவரியில் அதன் விலை மிக உயர்வாக இருந்தது. அப்போதிருந்து, எதிர்கால வியாபாரம் நிச்சயமில்லாமையால் விலைகள் சரியத் தொடங்கின. நாட்டின் வடப்பகுதியிலும் இம்மாநிலத்திலும் மிகு விளைச்சல் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. பெருமளவு இருப்பு தேங்கிக் கிடப்பதால் . புதிதாக வேர்க்கடலையை விலைக்கு வாங்குவதில் வனஸ்பதி தயாரிப்பாளர்கள் ஆர்வம் காட்டவில்லை. சோயா, மொச்சை எண்ணெயும் தாவர எண்ணெயும் அமெரிக்காவிலிருந்து பெருமளவு இறக்குமதியானதையும் விலை இறக்கத்திற்கு காரணமாயிருந்தது. இம்மாநிலத்திற்கு வெளியே வேர்க்கடலையை ஏற்றுமதி செய்யக் கூடாதென்று தடை செய்யும் இம்மாநிலத்தின் திட்டமும் வேர்க்கடலையின் விலை இறங்குவதற்கு ஓரளவு காரணமாயிருந்தது. மிளகாயைப் பொறுத்த வரையில், 1966 மே திங்களில் அது குவிண்டால் ஒன்று ரூ. 350-க்கு விற்று வந்தது. 1966 செப்டம்பரில் ரூ. 680 வரையில் அதன் விலை ஏறியது. அதிக உற்பத்தியின் காரணமாக அப்போதிருந்து விலைகள் படிப்படியாக இறங்கத் தொடங்கின.

(இ), (உ) உழவர்களின் நலன்கள் பாதிக்கப்படும் அளவிற்கு விலைகள் இறங்கவில்லை. உண்மையில், வேர்க்கடலையின் விலையும் மிளகாயின் விலையும் 1965-ல் இருந்ததைவிடத் தற்போது அதிகமாகவே உள்ளன. இவற்றை உற்பத்தி செய்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமா என்பதை முடிவு செய்ய 1966-ல் நிலவிய அளவுக்கு மீறிய அதிக விலைகளை அடிப்படையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்பொருள்களை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு மேற்சொன்ன நிலையையொட்டி உதவி எதுவும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கருதப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஆந்திராவில் மிளகாய் உற்பத்தி அதிகமாயிருக்கிறது, வேர்க்கடலை உற்பத்தி அதிகமாகயிருக்கிறது என்பதால் ஆந்திர முதலமைச்சர் பிரமானந்த ரெட்டி அவர்கள் மத்திய உதவி மந்திரி சிண்டே அவர்களைப் பார்த்து ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக ஆந்திராவிலுள்ள மிளகாயை ஒரு லட்சம் டன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், அதேபோல மணிலா எண்ணெய் ஏற்றுமதி செய்யவும் ஏறபாடு செய்திருப்பதாக

தெரிகிறது. ஆந்திர அமைச்சர் அதுபோல செய்திருப்பதால் தமிழக விவசாயிகளுக்கு நமது அமைச்சர்கள் அதுபோன்ற ஏற்பாடு செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தமிழகத்திலும் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. டி. கே. சுப்பையா : உழவர்கள் நிலை பாதிக்கும் அளவில் விலை இறங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த அளவுக்கு விலை குறைந்தால் உழவர்கள் நிலை பாதிக்கப்படும் என்பதை உணவு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கட்டுபடியாகக் கூடிய விலை என்பது தான்நமது நோக்கம். விலை அதிகமானாலும் நமக்கு சிரம மாகத்தான் இருக்கிறது. விலைகள் எப்பொழுதும் ஒரு நிலையில் இருப்பது தான் நல்லது. அந்த விலைதான் கட்டுபடியாகும் விலையாகும்.

திரு டி. கே. சுப்பையா : அரசாங்கம் அடிக்கடி வாங்குகிறவர்களின் நலனைத்தான் கருத்தில் கொள்கிறது. உழவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை எவ்வளவு என்று கண்டுபிடிக்க ஏதாவது இதுவரையில் ஆராய்ச்சி செய்தார்களா ? விவசாயிகளின் நிலை பாதிக்கப்படவில்லை என்பது எந்த அடிப்படையில் சொல்லப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் விலை குறைந்துவிட்டது இந்த அரசு வந்ததற்குப் பிறகு என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எம். அய்யாசாமி : ஒவ்வொரு ஆண்டும் இந்த மகசூல் காலங் களில் மிளகாய் மல்லி போன்ற பொருள்களின் விலை திடீரென்று இறங்குவதும், வியாபாரிகள் கொள்முதலை முடித்துக்கொண்டதும் விலையை ஏற்றுகிறார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் தடுக்க என்ன முயற்சி எடுக்கப்படும்.?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் சொல்வதுதான் சரியான நிலையாகும். விவசாயிகளுக்கு முன்பு எவ்வளவு கிடைத்து வந்ததோ அதுதான் எப்போதும் கிடைத்துவருகிறது. வியாபாரிகளுக்குத் தான் எப்போதும் கிடைப்பதைவிட இப்போது குறைந்திருக்கிறது என்பது தான் உண்மை.

திரு. எஸ். டி. சுந்தரம் : உற்பத்தியாளர்கள் 90 சதவிகிதம் என்றால் உண்பவர்கள் 90 சதவிகிதம் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இந்த விலைவாசிகள் இறங்கவும் ஏறவும் காரணமாக இருப்பவர்கள் 5 சதவிகிதம் உள்ள வியாபாரிகள்தான். அவர்களைப் பற்றி மக்கள் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கண்டிப்பாக வியாபாரிகளில் கள்ளப் பதுக்கல் செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். விலை வாசிகள் ஏற்றத்திற்கு அதுமட்டும் காரணமல்ல. மத்திய அரசு நோட்டு அடிப்பது, திட்டங்கள் போடுவது போன்ற காரணங்களும் உண்டு.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : கனம் உறுப்பினர் அய்யாசாமி அவர்கள் சொல்லும்போது, விளைச்சல் வருகிற காலங்களில் வியாபாரிகள் பொருள்களை வாங்கி வைத்துக்கொள்வதும் விளைச்சல் முடிந்ததும் விலையை கூட்டுவது வழக்கமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கடந்த வருஷத்தில் அதற்கு மாறாக நடந்தது என்பது எனக்கு நேரடியாகத் தெரிந்தது. போன வருஷம் மிளகாய் குவிண்டால் ரூ. 150 என்று விற்றது. ஆஃப் சீசனில் விவசாயிகள் பொருளை சேமித்து வைத்திருந்தால் நல்ல விலைக்கு விற்கலாம் என்று வைத்திருந்தார்கள். விலை குறைந்தே இருந்ததே தவிர ஏறவில்லை. அதே மாதிரிதான் கடலையும் இருந்தது. நண்பர் தியாகராஜன் அவர்கள் கேள்வியில் வெங்காயம் இல்லாவிட்டாலும்

கூட, அதைப்பற்றி "இந்து" பத்திரிகையில் பார்த்தேன். விவசாயிகள் தங்களுடைய வெங்காய விளைச்சலை இனுமாகவே எடுத்துப்போங்கள் என்று சொல்லும்போது, சிலோனுக்கு கொடுப்பதற்கு எக்ரிமெண்ட் செய்து பம்பாய் மூலமாகச் செல்ல ஏற்பாடு செய்தபிறகு, மற்ற தேசங்களிலிருந்து அதற்கு அதிகமான விலை கொடுக்க ஆஃபர் செய்ததால், முன்பு செய்ததை கான்சல் செய்துவிட்டு விட்டதாக பேப்பரில் பார்த்தேன். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக ஆந்திர முதலமைச்சர் ஒப்பந்தம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகச் செய்வதால் வெளிநாடுகளில் ஏற்படுகிற நஷ்டம் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அதற்கும் சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் இங்கே செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அடிப்படையான அம்சத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது. விளைவு அதிகரிக்கிறது. விவசாய உற்பத்தி அடிப்படையில் விலைகள் தருவதற்கு முடியும். எப்படி வெளியே பொருள்களை அனுப்பி நம்முடைய விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசித்து முயற்சிக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : சென்ற ஆண்டு மிளகாய் விலை கூடிய காரணத்தால் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய மறுத்தோம், பாகிஸ்தானும், சீனுவும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சப்ளை செய்து வருகிறது. அவற்றுடன் போட்டி போடத்தக்க அளவில் இலங்கையில் வியாபாரத்தைத் துவக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழக அரசிற்கு அத்தகைய அதிகாரம் இருந்தால் அதைச் செய்திருக்கும். இருந்தாலும் மாநில அரசின் வரம்புக்கு உட்பட்டு மத்திய அரசின் ஒத்துழைப்புடன் செய்ய இயன்றதை செய்ய முயற்சி எடுத்துக்கொள்வோம்.

Supply of rice to plantation workers of Kanyakumari district

*141 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state — 3–30 p.m.

(*a*) whether the Kanyakumari district plantation workers decided to launch a strike on account of the non-supply of rice to them ; and

(*b*) the action taken to distribute rice to those workers ?

கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி வினியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் அரிசி கிடைக்கவில்லையென வேலை நிறுத்தம் செய்வதென தீர்மானித்தனரா?

(இ) இவர்களுக்கு அரிசி வினியோகம் செய்ய எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அரிசி வழங்கப்படாததால் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்திய நிகழ்ச்சி எதுவும் அரசாங்கத்தின் நாட்டத்திற்கு வரவில்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வாரத்திலும் அரிசி ஒழுங்காக வழங்கப்பட்டு வருகிறது.